# கிழக்கு முஸ்லிம்களின் பாரம்பரிய வாழ்வியலை தெளிவுறுத்தும் 'நட்டுமை' நாவல் : சமூகவியலடிப்படையிலான விமர்சன நோக்கு

**Supervisor**
*Mrs. MLS. Rahila Ziyad,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Mr. AL. Mohamed Asmath,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

'நட்டுமை' என்பது பொது வழக்கில் இல்லாத ஒரு விவசாயக் கலைச்சொல். கிழக்கிலங்கையில் அம்பாரை மாவட்ட விவசாயிகள் மத்தியில் இச்சொல் வழக்கில் உள்ளது . ஒரு வயலில் உள்ள வரப்புகளினிடையே கட்டி வைக்கப்பட்ட நீர் , அவ்வரப்புகளில் ஏற்படும் துளைகளால் வயற்காரன் அறியாமல் அடுத்த வயலுக்குள் நீர் கசிந்து செல்வதை இது குறிக்கும் . 'நட்டுமை போயிருக்கு' என்றால் வயல் நீர் களவாக அடுத்த வயலுக்குள் இறங்கியுள்ளது என்று பொருள் . இந்நாவலில் ஆண்,பெண் இடையிலான கள்ள உறவைக் குறிப்பதற்கும் இச்சொல் உருவகமாக பயன் படுத்தப்பட்டுள்ளது.

இந்நாவலானது 1930 களுக்கு முற்பட்ட கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமம் ஒன்றை களமாகக் கொண்டது. இந்நாவலினூடாக அக்கிராம மக்களினுடைய தொழில், வாழ்க்கைமுறை, பழக்க வழக்கங்கள் , பண்பாடு, கலாசாரம் முதலியவற்றை அறிய முடிகின்றது. கிழக்கிலங்கைக் கிராமங்கள் பெரும்பாலும் விவசாயக் கிராமங்கள் தான். நவீனமயமாதலுக்கு முற்பட்ட சமூகத்தில் நில உடமையாளர்களுக்கு மிகுந்த மதிப்பும் அதிகாரமும் காணப்பட்டது. இவர்களுடைய வார்த்தைக்கு கிராம மக்கள் கட்டுப் படக்கூடியவர்களாகவும் காணப்பட்டனர். கிராமத்தில் எந்த ஒரு விஷேசமென்றாலும் இவர்களே முன் நின்று நடத்தக்கூடியவர்களாகவும் காணப்பட்டனர். 'போடியார" என அவர்கள் மரியாதையாக அழைக்கப்பட்டனர். இவர்கள் எப்பொழுதும் உடலுழைப்புடன் நேரடியாகச் சம்மந்தப் படாதவர்கள். போடியாரின் நிலத்தில் பயிர்ச் செய்கைக்குப் பொறுப்பானவர் 'வயற்காரா' என அழைக்கப்பட்டார். இவர் போடியாரின் மூலதனத்துடன் தமது உடலுழைப்பைச் செலுத்தி பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர். ஓவ்வொரு போடியாரும் குறைந்தது ஒரு வயற்காரனைக் கொண்டிருப்பர். இவர்களுக்கும் போடிமாருக்கும் இடையே உள்ள உறவு நில உடமை உறவாகவே இருக்கும்.

விவசாயத்துடன் தொடர்புபட்ட பிரிதொரு பிரிவினா 'கூலி' விவசாயிகள் .இவர்கள் உழுதல் ,விதைத்தல், அறுவடை செய்தல் , சூடடித்தல் முதலிய வேலைகளைச் செய்து ,கூலியை நெல்லாகவோ , பணமாகவோ பெற்றுக் கொள்வர். போடிமாரின் வயல்களை மேற்பார்வை செய்வதற்கு முல்லைக்காரர் எனப்படுபவர் நியமிக்கப்பட்டனர். பெரிய போடிமார் குறைந்தது ஒரு முல்லைக் காரனைக் கொண்டிருப்பர். பலருடைய வயற்பிரதேசங்களை உள்ளடக்கிய ஒரு வயற் பிரதேசம் கண்டம், வெளிவட்டை என அழைக்கப்படும். இத்தகைய வயற் பிரதேசத்தின் நீர்ப் பாய்ச்சல், பாதுகாப்பு நிருவாகத்துக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டவரை 'வட்டை விதானை' என அழைத்தனர். இவர் பேச்சு வழக்கில் 'வட்டானை' என அழைக்கப்பட்டார். அரசாங்கத்தால் நியமிக்கப் பட்ட கிராம அதிகாரியே

'விதானை' எனப்பட்டார். பிரித்தானிய ஆட்சியாளர் சில விதானைமாருக்கு பொலிஸ் அதிகாரமும் வழங்கியிருந்தனர் . இது பேச்சு வழக்கில் 'பொலிசானை' என்று மறுவிற்று.

இந்நாவலில், அகமது லெவ்வை (பெரிய போடியார்), முகம்மது அனீபா (சின்னப்போடியார்), மம்மலி(சின்னப் போடியாரின் எடுபிடி), யம்னா (மம்மலியின் மனைவி), மீரா வட்டானை (பெரிய வெளிக்கும் மழுவன் கண்டத்துக்கும் உரிய வட்டை விதானை), செய்னம்பு(மீரா வட்டானையின் மகள்), உமறுலெவ்வை (மீராவட்டானையின் இறந்து போன ஒரே தங்கையின் மகன்) ஆகியோர் மிக முக்கிய பாத்திரங்களாக வார்க்கப்பட்டுள்ளனர்.

சின்னப் போடியார் முகம்மது அனீபா, தனது எடுபிடியான மம்மலியின் இளம் மனைவியின் விருப்புக்கு மாறாகவே உறவு வைத்திருக்கின்றான் . இதனையே ஆசிரியர் நட்டுமை போயிருப்பதாக குறிப்பிடுகின்றார் மேலும் செய்னம்புவின் மீதும் ஒரு தலையாகக் காதல் கொள்கின்றான் .ஆனால் செய்னம்புவோ தனது முறை மச்சானான உமறு லெவ்வையின் மீது காதல் கொள்கின்றாள். உமறு லெவ்வையும் அவள் மீது காதல் கொள்கின்றான் . இந்தக் காரணத்தாலும் விவசாயப் பிரச்சினைகளாலும் (அதாவது முகம்மதனிபாவின் 92 ஏக்கர்களும் பெரியவெளி எனும் வட்டையில் அமைந்துள்ளது. மழுவன் கண்டம் எனும் வட்டையில் 5,10 ஏக்கர்களையே உடைமையாகக் கொண்ட சிறு போடிமார்களே காணப்படுகின்றனர் . மழை இல்லாத காரணத்தினால் குளத்து நீரையே நம்பி பயிர்ச் செய்கையை மேற்கொள்ள வேண்டியிருந்தது. முதலில் பெரிய வெளிக்கே நீரை திறந்து விட்டனர் .இதனால் ஏனைய வட்டையிலுள்ள பயிர்கள் வாடிப் போய் அழிந்தன. மழுவன் கண்டத்துக்குத்தான் முதலில் நீரை திறந்து விட வேண்டும் என்று உமறு லெவ்வையின் தலைமையில் சிலர் பிரச்சினையை ஏற்படுத்தினர். இந்தக் காரணத்தாலும் உமறுலெவ்வைக்கும் சின்னப் போடியாருக்கும் இடையே விரோதமும் பழிவாங்கல்களும் ஏற்படுகின்றன).

சின்னப்போடியார் முகம்மது அனீபாவின் காதல், காமம், சண்டித்தனம் அதன் விளைவான சண்டை , கொலை ஆகிவற்றைச் சுற்றியே நாவலின் பிரதான கதைப் பின்னல் நகர்கிறது. செய்னம்புவின் உடன் பிறவாச் சகோதரியாகவும் தாய் வழி உறவினளாகக் காணப்படும் யம்னா சின்னப்போடியார் செய்னம்புவின் மீது கொண்டுள்ள காதலை ஒதுக்குபவளாகவும் உமறுலெவ்வையின் காதலை வரவேற்கக்கூடியவளாகவும் காணப்பட்டாள் .அதற்கு நேர் எதிராகவே மம்மலி காணப்பட்டான் . சின்னப் போடியாரின் அத்துமீறல்கள் பற்றி யம்னா மம்மலியிடம் கூற , மம்மலி சின்னப் போடியாரை கொலை செய்து விட்டு தானும் நஞ்சுண்டு இறந்து விடுகிறான் .உமறுலெவ்வைக்கும் செய்னம்புவுக்கும் திருமணம் நடைபெறுகிறது .யம்னா குழந்தையைப் பெற்றெடுத்து செய்னம்புவின் கைகளில் ஒப்படைக்கிறாள் .பெரிய போடியாரிடம் நடந்தவற்றை கூறி விட்டு தற்கொலை செய்து கொள்கிறாள் .அக்குழந்தையை ,பெரிய போடியார் ஹஜ் யாத்திரையை முடித்து விட்டு வந்து தனது பேரக்குழந்தையாக ஏற்றுக்கொள்கிறார். இது தான் இந்நாவலின் கதையாகும்.

பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இந்நாவலை சமூகவியலடிப்படையிலான விமர்சன நோக்கில் பார்த்தல், இந்நாவலில் பயன்படுத்தப் பட்டுள்ள பேச்சு வழக்குச் சொற்கள், உத்திகள், அணிகள், மக்களினுடைய பழக்க வழக்கங்கள் முதலானவற்றைக் கண்டறிதல், இந்நாவல் 1930 களுக்கு முற்பட்ட கிழக்கு முஸ்லிம்களின் வாழ்வியலை தெளிவுறுத்துவதால், அக்கால மக்களின் வாழ்க்கை முறை, கலாச்சரம், பண்பாடு முதலானவற்றினை அறிந்து கொள்ளல்.

இவ்வாய்வில் முதலாம் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்படவுள்ளன . நட்டுமை நாவலும் நாவலாசிரியரின் படைப்புகள் மற்றும் விமர்சனங்கள் முதலாம் நிலைத்

தரவுகளாகவும் இவ்வாய்வுடன் தொடர்பான நூல்கள் மற்றும் நேர்காணல் முதலியவை இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் பயன் படுத்தப்படவுள்ளன

இவ்வாய்வில் சமூகவியல் ,மொழியியல் ,ஆய்வு முறைகள் பயன்படுத்தப்படும் .

நட்டுமை நாவலானது 1930 களுக்கு முற்பட்ட கிழக்கு முஸ்லிம்களின் வாழ்வியலைத் தெளிவுறுத்துகிறது. இந்நாவலினூடாக நமது முன்னோர்களின் வாழ்கை முறையினையும் அவர்களின் பிரதான தொழிலான விவசாயத்தைப் பற்றியும், விவசாயிகளின் புழக்கத்தில் காணப்பட்ட பேச்சு வழக்குச் சொற்களையும் அறிந்து கொள்ளலாம். அக்கால மக்களின் வீரம், காதல், காமம் முதலான அம்சங்களினூடாக நாவலின் கதையானது விறுவிறுப்பாக நகர்த்திச் செல்லப்படுகிறது. கதையின் முடிவினூடாக "நேர்மை தான் நிலைக்கும், மனித தன்மையை இழந்து மிருகத்தானமாக வாழ்பவர்கள் அழிந்து விடுவார்கள்" என்னும் உண்மை தெளிவாகும்.

**Key words:** மக்களின் வாழ்வியல், நாவல்.